இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 04-11-2023

# ஒட்டுக் கேட்க வைக்கும் பயம்

இந்தியாவில் எதிர்க்கட்சி எம்.பி.க்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஆப்பிள் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஐபோன் பயன்படுத்தும் எதிர்க்கட்சித் தலைவர்கள், பத்திரிகையாளர்களுக்கு ஆப்பிள் நிறுவனம் அனுப்பியுள்ள செய்தியால் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ், காங்கிரஸ் எம்.பி., சசிதரூர், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் பவன் கேரா, திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி., மகுவா மொய்த்ரா, சிவசேனா கட்சியின் உத்தவ் தாக்கரே பிரிவைச் சேர்ந்த பிரியங்கா சதுர்வேதி, ஆம் ஆத்மி கட்சியின் ராகவ் சத்தா எம்.பி. மற்றும் ராகுல் காந்தி அலுவலகத்தில் பணிபுரியும் 3 பேர் உள்ளிட்டோருக்கு ஆப்பிள் போன் நிறுவனம் இதுபற்றிய எச்சரிக்கைக் குறுஞ்செய்தி அனுப்பியுள்ளது. அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி மூத்த பத்திரிகையாளர் சித்தார்த் வரதராஜன் உள்ளிட்டோரின் செல்போன்களும் ஒட்டுக் கேட்கப் பட்டுள்ளன.**

‘அரசின் ஏற்பாட்டில் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக’ ஆப்பிள் நிறுவனத்தில் இருந்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பயன்படுத்தும் ஐ - போன் மற்றும் மின்னஞ்சல்களை அரசின் உதவி பெறும் அமைப்பால் ‘ஹேக்’ செய்ய முயற்சி செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் பா.ஜ.க.வின் கெட்ட அரசியல் அம்பலமாகி உள்ளது.

ஜனநாயக நாட்டில் சுதந்திரம் பறிக்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ள அகிலேஷ், “இப்படி துப்பறிந்து என்ன சாதிக்கப் போகிறீர்கள்?” எனக் கேள்வி எழுப்பியுள்ளார். எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதற்கு கண்டனம் தெரிவித்துள்ள காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி, “செல்போன் ஒட்டுக்கேட்பது நேர்மையானவர்கள் செய்யும் செயல் அல்ல, குற்றவாளிகள் செய்யும் செயல்” என்று விமர்சித்துள்ளார். “எவ்வளவு ஒட்டுக்கேட்டாலும் எங்களுக்கு அச்சமில்லை” எனவும் அவர் கூறியுள்ளார்.

**எதிர்க்கட்சித் தலைவர்களின் செல்போன்கள் ஒட்டுக் கேட்கப்படுவதாக ஆப்பிள் நிறுவனம் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்து விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. இப்புகார்கள் குறித்த விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி ஆப்பிள் நிறுவனத்திற்கும், எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக ஒன்றிய தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். “இதை விட கேலிக்கூத்து இருக்க முடியாது” என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விமர்சித்துள்ளார்கள். குற்றம் சாட்டப்பட்டவர்களே விசாரணை நடத்துவதாகச் சொல்வதை அவர் விமர்சித்துள்ளார்.**

பா.ஜ.க. அரசு மீது இத்தகைய குற்றச்சாட்டுகள் வருவது புதிதல்ல. மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாக பெகாசஸ் பூதம் கிளம்பியதை யாரும் மறந்திருக்க முடியாது.

இஸ்ரேலைச் சேர்ந்த என்.எஸ்.ஓ. நிறுவனத்தின் பெகாசஸ் மென்பொருள் மூலம் உலகம் முழுவதும் உள்ள மனித உரிமைப் போராளிகள், பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட 50 ஆயிரம் பேரின் செல்போன் தகவல்கள் திருடப்பட்டுள்ளதாக ‘தி கார்டியன்’, ‘வாஷிங்டன் போஸ்ட்’ ஆகிய இதழ்கள் செய்தி வெளியிட்டு, 2021 ஆம் ஆண்டு ஜூலையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியன.

**இந்தியாவைச் சேர்ந்த இணைய தள செய்தி நிறுவனமான ‘தி வயர்’, இந்தியாவில் 40 பத்திரிகையாளர்கள், 2 மத்திய அமைச்சர்கள் உட்பட 300 பேரின் ஸ்மார்ட்போன் தகவல்கள் திருடப்பட்டதாகத் தெரிவித்தது. இதில் அமைச்சர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள், விஞ்ஞானிகள், மனித உரிமைப் போராளிகள் ஆகியோரது ஸ்மார்ட்போன் எண்களும் அடங்கும். இந்தச் செய்தி வெளியானதும், “நாங்கள் சட்டத்துக்குப் புறம்பாக எதையும் செய்யவில்லை” என்று ஒன்றிய அமைச்சர் அஸ்வினி அப்போது மறுத்தார்.**

“அரசுகளுக்கு மட்டுமே பெகாசஸ் மென்பொருள் விற்கப்பட்டுள்ளது. சீன அரசோ, பாகிஸ்தான் அரசோ இந்தியக் குடிமக்களை உளவு பார்க்க முடியாது. இது தேச பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விவகாரம் என்பதால் நாடாளுமன்ற கூட்டுக் குழு விசாரணை வேண்டும்” என்று எதிர்க்கட்சிகள் அப்போது கோரிக்கை வைத்தன.

“தொலைபேசி ஒட்டுக் கேட்பு புகார் குறித்து நாடாளு மன்றத்தில் உள்துறை அமைச்சர் அமித்ஷா விளக்கம் அளிக்க வேண்டும். இஸ்ரேல் நிறுவனத்துடன் மோடி அரசுக்குத் தொடர்பா? இல்லையா? என்பதுபற்றி விளக்க மளித்தால் நல்லது. இல்லாவிட்டால் அமெரிக்காவின் வாட்டர்கேட் ஊழல் போல இது தலைவலியாக மாறும்” என்று சுப்பிர மணியன் சுவாமியே அப்போது சொன்னார்.

மென்பொருள் விற்பனையில் முறைகேடு, அரங்கேறியதாகக் கூறப்படுவதை மறுத்த என். எஸ்.ஓ. நிறுவனம், “ஜனநாயகம் இல்லாத நாடுகளுக்கு அந்த மென்பொருளை விற்பனை செய்வதால் எழுந்த விமர்சனங்களைப் பொருட்படுத்தத் தேவையில்லை” என்று விளக்கமளித்தது. அதாவது, இவர்கள் யார் போனையும் ஒட்டுக் கேட்பார்கள். அதனை சகித்துக் கொள்வது தான் ஜனநாயகம் என்று இந்தியாவுக்குக் கற்றுக் கொடுக்கப் பார்த்தது அந்த நிறுவனம்!

இதுகுறித்து வழக்கறிஞர் எம்.எல்.சர்மா என்பவர் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.வி.ரவீந்திரன் தலைமையில் மூவர் குழுவை உச்சநீதிமன்றம் அமைத்தது. இக்குழு 2022 ஆகஸ்ட் 26 அன்று தனது அறிக்கையைத் தாக்கல் செய்தது. அதிலாவது ஏதாவது உண்மை வெளிவந்ததா என்றால் இல்லை. அந்தக் குழு தனது அறிக்கையில், “விசாரணைக்கு ஒன்றிய அரசு ஒத்துழைக்கவில்லை” என்று தெரிவித்தது.

மேலும், அந்தக் குழுவின் அறிக்கை குறித்து உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா , “உளவு மென்பொருள் பற்றி ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 29 தொலைபேசிகளில் 5-ல் மட்டுமே உளவு மென்பொருள் இருந்தது. ஆனால், அவையும் பெகாசஸ் உளவு மென்பொருள்தானா என்பது உறுதியாக வில்லை” என்றார்.

‘அரசு ஒத்துழைக்கவில்லை’ என்று நிபுணர் குழு கூறியதைப் பற்றி உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சுட்டிக் காட்டி கண்டனத்தைத் தெரிவித்தார். “இங்கே எப்படி ஒத்துழைக்க வில்லையோ அதேபோல் அங்கே விசாரணை ஆணையத்திலும் மத்திய அரசு ஒத்துழைக்கவில்லை போல” என்றார். அதற்கு அரசுத் தரப்பு சொலிசிட்டர் ஜெனரல், ‘அது பற்றி தனக்குத் தெரியாது’ என்று கூறினார். அத்தோடு இந்த வழக்கே கிடப்பில் போடப்பட்டது.

இந்த நிலையில் இப்போது, ‘ஆப்பிள் பூதம்’ கிளம்பி இருக்கிறது. இது தொடர்பான விசாரணையிலும் உண்மை எதுவும் வெளியில் வரப் போவது இல்லை. ஆனால், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னதைப் போல, ‘பா.ஜ.க.வின் தோல்வி பயம்’ வெளியில் வந்துள்ளது.

●●



வேலூர் மாவட்டம் காட்பாடியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள்துறை சார்பில் நடந்த சமுதாய வளைகாப்பு விழாவில் கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசைப் பொருட்களை வழங்கி, கழக பொதுச் செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பேசினார்.அருகில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகத்ரட்சகன், மாவட்ட ஆட்சியர் குமரவேல் பாண்டியன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றியக் குழுத் தலைவர் வேல்முருகன், மண்டலகுழு தலைவர் புஷ்பலதா, மாமன்ற உறுப்பினர் விமலா சீனிவாசன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## 1.42 லட்சம் விவசாயிகள் பயனடைவர்!

# கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.253.70 கோடி ஊக்கத்தொகை!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கை!

சென்னை, நவ. 4-

சர்க்கரை ஆலைகளுக்கு 2022-2023 அரவைப் பருவத்திற்கு பதிவு செய்து கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத் தொகை வழங்குவதற்காக ரூ. 253.70 கோடி வழங்கி ஆணை வெளியீட்டுள்ளதாக வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவீத்துள்ளார்.

கரும்பு சாகுபடிப் பரப்பினையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக, அதிக கரும்பு மகசூலுடன், அதிக சர்க்கரைக் கட்டுமானமும் தரக்கூடிய கரும்பு இரகங்களை பிரபலப்படுத்துதல், கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்குதல் மற்றும் மானிய விலையில் சொட்டு நீர்ப்பாசனம், கரும்பு அறுவடை இயந்திரங்கள் வழங்குதல் ஆகியவை தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு, நலிவடைந்து வரும் சர்க்கரை ஆலைகளில் புனரமைப்பு, எத்தனால் உற்பத்தித் திட்டம், இணைமின் திட்டம் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதால் சர்க்கரை ஆலைகளின் திறன் மேம்படுத்தப் பட்டு வருகிறது.



### கரும்பு சாகுபடிப் பரப்பு அதிகரிப்பு!

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக அரசு எடுத்த நடவடிக்கைகளினால், 2020-21 அரவைப்பருவத்தில் 95,000 எக்டராக இருந்த கரும்புப் பதிவு, 2022-23 அரவைப் பருவத்தில் 1,50,000 எக்டராகவும், கரும்பு அரவை 98.66 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 160.54 இலட்சம் மெட்ரிக் டன்னாகவும் அதிகரித்துள்ளது. மேலும் சர்க்கரைக் கட்டுமானம் கடந்த பத்து ஆண்டுகளுக்கு பிறகு 2022-23 அரவைப் பருவத்தில் 9.27 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

### கரும்புக்கு சிறப்பு ஊக்கத் தொகை!

முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள், 2023-24 ஆம் ஆண்டு வேளாண்மை நிதி நிலை அறிக்கையில், 2022-23 அரவைப்பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய தகுதியுள்ள விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூ.195/ சிறப்பு ஊக்கத்தொகையாக வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒன்றிய அரசு 2022-23 ஆம் அரவைப் பருவத்திற்கு அறிவித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான (Fair and Remunerative Price) ரூ.2821.25/யைக் காட்டிலும் கூடுதலாக மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக டன்னுக்கு ரூ. 195 வழங்கிடும் வகையில், தமிழ்நாடு அரசு ரூ.253.70 கோடி நிதியினை மாநில நிதியிலிருந்து வேளாண்மை உழவர் நலத்துறைக்கு வழங்கி ஆணையிட்டுள்ளது.

சிறப்பு ஊக்கத் தொகையுடன் சேர்த்து டன்னுக்கு ரூ.3016.25/ அரசு வெளியிட்டுள்ள இந்த ஆணையின்படி, தமிழ்நாட்டில் இயங்கி வரும் இரண்டு பொதுத்துறை, 14 கூட்டுறவு மற்றும் 15 தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு 2022-23 அரவைப் பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒன்றிய அரசு நிர்ணயித்துள்ள நியாயமான மற்றும் ஆதாய விலையான ரூ.2821.25 மற்றும் மாநில அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக ரூ.195யையும் சேர்த்து, டன் ஒன்றுக்கு ரூ.3016.25/ கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

2022-23 அரவைப் பருவத்தில் சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய விவசாயிகளின் விபரம் சேகரிக்கப்பட்டு சர்க்கரைத்துறை ஆணையரகத்தால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான மாவட்ட அளவிலான குழுவின் பரிந்துரையின்படி, தகுதியுள்ள விவசாயிகளுக்கு, சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

கரும்பு விவசாயிகளின் நலனுக்காக ரூ.253.70 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசு வழங்கும் சிறப்பு ஊக்கத்தொகையினால் சுமார் 1.42 இலட்சம் கரும்பு விவசாயிகள் பயனடைவார்கள்.

## காரைக்குடியில் இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பில்

# 100 கலைஞர்கள் பங்கேற்ற - கலைஞர் நூற்றாண்டு - கலைத்திருவிழா!

## அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் – வாகை சந்திரசேகர் பங்கேற்பு!

சிவகங்கை, நவ.4-

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் காரைக்குடி கண்ணதாசன் மணி மண்டபத்தில் கலைஞர் நூற்றாண்டினை முன்னிட்டு 100கலைஞர்கள் பங்கேற்ற கலைத் திருவிழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் கலை திருவிழா நடத்திய கலைஞர்களை சான்றிதழ் வழங்கி பாராட்டினார்கள். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கூட்டுறவு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது:-

தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டினைமுன்னிட்டு 100 கலைஞர்கள் பங்கேற்ற கலைத்திருவிழாவினை சிறப்பாக நடத்தினார்கள். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சாதனைகளை அனைத்து மக்களும் தெரிந்து, கொள்ளும் வகையில் 30க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் முத்தமிழறிஞர்தேர் என்ற வாசகத்துடன் வலம் வர உள்ளது. இதனால் தலைவர் கலைஞரை பற்றிய முழுமையான வரலாறுகளை இன்றைய இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ளமுடியும். வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சிகளை கலைநயத்துடன் அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் சிறப்பான பணியினை நாடகக் கலைஞர்கள் மேற்கொண்டு வருகிறார்கள். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் சிறப்பான நல்லாட்சியை நடத்தி வரும் முதல்வர் தளபதி அவர்கள் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்து வருகிறார். இங்கும் நாடக நடிகர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்துள்ளார்கள். இது குறித்து நானும் நலவாரிய தலைவர் வாகை சந்திரசேகர் ஆகியோர் முதல்வரிடம் தெரிவிப்போம். தலைவர் கலைஞர் வழியில் சிறப்பான ஆட்சி நடத்தி வரும் முதல்வர் அவர்களால் நல்லதொரு பயன் கிடைக்க முயற்சி செய்வோம். இவ்வாறு அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத் தலைவர் வாகை சந்திரசேகர் பேசியதாவது:-

தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களால் 1973 ஆம் ஆண்டு இயல், இசை, நாடக மன்றம் என்று பெயர் சூட்டப்பட்டது. மேலும் மாநில அளவில் இயல், இசை, நாடகம், நாட்டியம், கிராமிய கலைகள், திரைப்படம், சின்னத்திரை மற்றும் ஓவியம் போன்ற கலைகளை போற்றி பாதுகாக்கவும், துறை சார்ந்த கலைஞர்களுக்குத் தேவையான உதவிகளையும் கலை வளர்ச்சி பணிகளையும் செயல்படுத்து வதை தனது உயர்ந்த நோக்கமாக கொண்டு இந்த மையம் செயல்பட்டு வருகிறது. குறிப்பாக நலிவுற்ற கலைஞர்களுக்கு மாதம்தோறும் நிதியுதவி, புதிய நாட்டிய நாடகங்கள் தயாரிப்பிற்கான நிதி உதவி, புதிய கலை இலக்கிய நூல்களை பதிப்பதற்கான நீதி உதவி, மாநில மாவட்ட அளவில் கலைவிழாக்களை நடத்துதல், தமிழின் சிறப்புகளை இளைஞர்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் விதமாக முத்தமிழ் முகாம் சிறப்பு திட்டம் நாட்டுப்புற கலைஞர்களுக்கு ஆடை அணிகலன்கள் வாங்க உதவிகள், அவர்களுக்கு இசைக்கருவிகள் வாங்க ஆண்டு தோறும் நிதிஉதவி, வழங்குதல் போன்ற பல்வேறு பணிகளை செய்து வருகிறது. மேலும் வருடம் தோறும் சிறந்த கலைகளை தேர்ந்தெடுத்து அவர்களை கௌரவிக்கும் விதமாக கலைமாமணி விருது வழங்கி சிறப்பித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது. தமிழர் திருநாளை முன்னிட்டு பொங்கல் திருநாளில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் கலைசங்கமம் கலைத் திருவிழா நடத்தி மக்களின் வரவேற்பினை பெற்றது. இங்கு நடைபெறும் கலைத் திருவிழாவில் 100 கலைஞர்கள் பங்கேற்று பல்வேறு நிகழ்ச்சிகளை திறம்பட நடத்தினார்கள். இந்த நிகழ்ச்சி சிறப்புற அமைய பாடுபட்ட அனைவருக்கும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு வாகை சந்திரசேகர் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் எஸ்.மாங்குடி எம்.எல்.ஏ. வாழ்த்திப் பேசினார். இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் கோட்டாட்சியர் ஏஸ்.பால் துரை, நகர்மன்ற தலைவர் எஸ்.முத்து துரை, துணைத்தலைவர் என். குணசேகரன், தமிழ்நாடு இயல், இசை, நாடகக் கலைஞர்கள் பேரவையின் மாநிலத் தலைவர் எம்ஆ.ர். எம்.பாலசுப்பிரமணியன், ஒருங்கிணைப்பாளர் சோமசுந்தரம் உட்பட கலைஞர்கள் கலந்து கொண்டார்கள். கலைத்திருவிழாவில் தப்பாட்டம், ஒயிலாட்டம், கிராமிய பாடல்கள் , மயில் நடனம், நாடகங்கள் போன்ற பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.



நெல்லை மாவட்டம் நாங்குநேரி வட்டம் திருக்குறுங்குடி கிராமம் கொடுமுடியாறு நீர்தேக்கத்தில் இருந்து பிசான பருவ சாகுபடிக்கு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள், மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார். உடன் அதிகாரிகள், கழகத்தினர் பலர் உள்ளனர்.